6. *நாடென்ப நாடா வளத்தன நாடல்ல*

*நாட வளம்தரு நாடு.*

பொருள் : பெரிய அளவில் முயற்சி இல்லாமல் வளம்தரும் நாடே சிறந்த நாடாகும். முயற்சி செய்து சேரும் வளத்தை உடைய நாடு சிறந்த நாடு ஆகாது.

அணி : சொற்பொருள் பின்வருநிலை அணி

### அரண்

7. *மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்*

*காடும் உடையது அரண்.*

பொருள் : தெளிந்த நீரும், நிலமும், மலையும், அழகிய நிழல் உடைய காடும் ஆகிய நான்கும் உள்ளதே அரண் ஆகும்.

8. *எனைமாட்சித்து ஆகியக் கண்ணும் வினைமாட்சி*

*இல்லார்கண் இல்லது அரண்.*

பொருள் : அரண் எவ்வளவு பெருமையுடையதாக இருந்தாலும், செயல் சிறப்பு இல்லாதவரிடத்தில் அது பயனில்லாதது ஆகும்.

### பெருமை

9. *பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா*

*செய்தொழில் வேற்றுமை யான்.**

பொருள் : பிறப்பால் மக்கள் அனைவரும் ஒத்த இயல்புடையவர்களே. அவர்கள் செய்யும் நன்மை, தீமையாகிய செயல்களால் அவர்களது சிறப்பியல்புகள் ஒத்திருப்பதில்லை.

10. *பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்*

*அருமை உடைய செயல்.*

பொருள் : உயர்ந்த பண்புகளை உடையவர் செய்வதற்கு அரிய செயல்களை உரிய நெறிமுறையில் செய்து முடிப்பர்.

### உவமை அணி (குறள் எண்: 2)

ஒரு யானையைக்கொண்டு மற்றொரு யானையைப் பிடிப்பர் என்பது உவமை. ஒரு செயலைச் செய்யும்போதே அச்செயலால் மற்றொரு செயலையும் செய்து முடித்துக் கொள்ளல் வேண்டும் என்பது உவமேயம். அற்று என்பது உவம உருபு. எனவே, இஃது உவமை அணி ஆகும்.